

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.8.2023) சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள பள்ளிக் கல்வித்துறையின் பேராசிரியர் க.அன்பழகன் கல்வி வளாகத்தில், புதிதாக நிறுவப்பட்டுள்ள பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அச்சிலை அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், பேராசிரியர் அவர்களின் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி

# மாணவ - மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 11 -
தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.8.2023) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 12 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 5 விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்துவதை சிறப்பு நோக்கமாகக் கொண்டு பல்வேறு முனைப்பான திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தி, அம்மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி கல்வி கற்றிட கல்வி உதவித் தொகை வழங்குதல், புதிய பள்ளி மற்றும் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன், 3 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம்;

கடலூரில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன், 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல தொழிற்பயிற்சி மாணவியர் விடுதிக் கட்டடம்;

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன், 2 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்;

தஞ்சாவூரில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன், 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்;

மதுரை மாவட்டம், மேலூரில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன்,

2 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படு'த்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம்; என மொத்தம் 12 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 விடுதிக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அணில் மேஷ்ராம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின ர் நல ஆணையர் வா. சம்ப த், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சிறப்புச் செயலாளர் ஹனீஷ் சாப்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உழைக்கும் மகளிரின் முகவரியாக 'தோழி' விடுதிகள்!

## முதல்வருக்கு 'தினத்தந்தி' தலையங்கத்தில் புகழாரம்!

சென்னை, ஆக. 11 -
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெண்களின் முன்னேற்றத்திற்காக தமிழகமெங்கும் "தோழி" இல்லங்களைத் தொடங்கினார். அதன் தொடர்ச்சியாக நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அத் திட்டத்தை விரிவுப் படுத்தி. அதற்காக அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்து சிறப்பான முறையில் சேவையாற்றுகிறார். உழைக்கும் மகளிரின் முகவரியாக "தோழி" திட்டம் மாற்றப் பட்டுள்ளதாக "தினத்தந்தி" நாளேடு தலையங்கத்தில் முதல்வருக்குப் புகழாரம் சூட்டியுள்ளது.

அது வருமாறு:

'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு' என்று சொல்லியது ஒரு காலம். பெண்கள் என்றாலே, அவர்களுக்கு படிப்பு தேவையில்லை. நாலெழுத்து மட்டும் படித்தால் போதும். பால் கணக்கு எழுத, சலவைக்கு போடும் துணி கணக்கை எழுத மட்டும் தெரிந்தால் போதும். தினமும் வாசலை பெருக்கி, வீடு கூட்டி, சமையல் செய்து, குழந்தைகளை பார்த்துக்கொண்டு குடும்பத்தை நடத்தும் பொறுப்புதானே அவர்களுக்கு, பிறகு ஏன் படிப்பு? என்று இருந்த காலத்தில், பல தலைவர்கள் குறிப்பாக தந்தை பெரியார், காமராஜர் போன்றவர்கள், பெண் கல்வியின் மேன்மையை எடுத்துரைத்ததால், சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்பட்டது. படிப்படியாக கல்வியில் கால்தடம் பதித்து, இன்று அனைத்து படிப்புகளிலும் முத்திரை பதித்து வருகிறார்கள்.

ஆரம்பத்தில் பெண்கள் வேலைக்கு போக ஆதரவு கரம் நீட்டாத சமுதாயம், பிறகு ஆசிரியர், நர்சு, டெலிபோன் ஆபரேட்டர் வேலைகளில் மட்டும் அவர்களை ஏற்றுக்கொண்டது. படிப்படியாக அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு தொடங்கிய நிலையில், இன்று ராணுவம், போலீஸ் போன்ற துறைகள் உள்பட பெண்கள் இல்லாத துறையே இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. தமிழ்நாட்டில் அனைத்து வேலைவாய்ப்புகளிலும் பெண்களுக்கு இடஒதுக்கீடும் இருக்கிறது. இங்கு பெண்களின் உழைப்பாற்றல் 43 சதவீதமாகும். எல்லா பெண்களுக்கும் உள்ளூரிலேயே வேலை கிடைத்து விடுவதில்லை. நகர்ப்புறங்களில் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் போது, பெண்கள் தங்கள் வீடுகளைவிட்டு அங்கே




சென்று தங்கி வேலை பார்க்கும் சூழ்நிலையில், அவர்களுடைய வருமானத்துக்கு ஏற்ற அளவில், பாதுகாப்பான தங்கும் இடங்கள் அத்தியாவசிய தேவையாக இருக் கிறது. இதுபோன்ற பெண்களின் நிலையைக் கருத்தில் கொண்டு, 1971ம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த போதுதான் பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் தொடங்கப்பட்டன. இன்று மாநிலம் முழுவதும் 28 விடுதிகள் இருக்கின்றன. இடையில் இந்த விடுதிகள் பராமரிப்பில் தொய்வு ஏற்பட்டது. தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் என்ற ஒரு அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து விடுதிகளுக்கும் நல்ல வசதிகளை கொண்டுவந்து, அந்த விடுதிகளெல்லாம், உழைக்கும் மகளிரின் முகவரியாக தோழிஎன்றபெயரில்இயங்க முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

புதிய விடுதிகள் தொடங்கவும், பழைய விடுதிகளை புதுப்பிக்கவும் கணிசமான நிதியை ஒதுக்கியுள்ளார். எந்த அளவு மாத சம்பளம் வாங்கும் மகளிரும் தங்கும் அளவில், தங்கும் வசதிகள் இந்த விடுதிகளில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. குளிர்சாதன வசதி கொண்ட அறை முதல் நால்வர் பகிர்ந்து கொள்ளும் சாதாரண அறைகூட குறைந்த வாடகையில் இந்த தோழி விடுதிகளில் இருக்கின்றன. மாத வாடகைக்கு மட்டுமல்லாமல், பணிபுரியும் மகளிரைத்தவிர போட்டி தேர்வுகள், நுழைவு தேர்வுகள், கல்லூரி சேர்க்கை, நேர்முக தேர்வுக்காக ஊர் விட்டு ஊர் வரும் பெண்கள் கூட, இந்த விடுதிகளில் ஓரிரு நாட்கள் தங்கிக்கொள்ளலாம். அதிக ஊதியம் பெறுபவர்கள் முதல், குறைந்த ஊதியம் பெறும் பெண்கள் வரை அனைவருக்கும் ஒரு உற்ற தோழிபோல, அனைத்து வசதிகளையும் கொண்ட பாதுகாப்பு அம்சங்களுடன் இந்த தோழி விடுதிகள், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சொன்னது போல, முன்னேறும் மகளிருக்கான முகவரியாகும். மொத்தத்தில் பணி நிமித்தம், தங்கள் வீடுகளை விட்டு வெளியூரில் வந்து தங்கும் மகளிருக்கு, இதுவும் ஒரு வீடு போல அமைந்துள்ளது.

இவ்வாறு "தினத்தந்தி" தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

### நுகர்வோர் வாணிபக் கழக ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல்

# நியாய விலைக் கடை ஊழியர்களுக்கும் ஊதிய விகிதம் வழங்க வேண்டும்!

## தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக் கடை தொ.மு.ச. கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக. 11 -
நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல் நியாய விலைக் கடை ஊழியர்களுக்கும் ஊதிய விகிதம் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக் கடை தொ.மு.ச. நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக்கடை தொ. மு.ச.வின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் 09.08.2023 அன்று மாலை தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான கலைஞரகத்தில் எஸ். உமாகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நியாய விலைக் கடை மாநில பொதுச் செயலாளர் இரா. பொன்னுராம் முன்னிலை வகித்து ஆலோசனை வழங்கி பேசினார். தொ.மு.ச. மாநில பொருளாளர் கி.நடராசன் சிறப்புரையாற்றினார். இதில் நியாய விலைக் கடை தொ.மு.ச. மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பொருளாளர் கே. வெங்கட்ராயலு நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இச்சங்க மாநில பொதுச் செயலாளர் இரா. பொன்னுராம் தெரிவித்துள்ளதாவது

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு தொழிலாளர்கள் 25 ஆயிரம் பேரை பணி நிரந்தரம் செய்தார்கள். கூட்டுறவு ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு நிகரான அகவிலைப்படி வழங்கினார்கள். அவருக்கு கூட்டுறவு ஊழியர்கள் என்றும் நன்றி கடன் பட்டவர்கள். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை மிகச் சிறப்பாக நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசின் முதல்வர் தளபதி அவர்களின் சீரிய திட்டமான மகளிர் உரிமைத் தொகையினை வழங்குவது தொடர்பாக நியாய விலைக்கடை பணியாளர்கள் சிறப்பாகச் செய்தனர். முதல்வர் அவர்களின் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு இக்கூட்டம் வரவேற்று, வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் பல்வேறு அமைப்புகளால் செயல்படும் நியாய விலைக்கடை ஒரே துறையின் கீழ் கொண்டு வந்து நுகர் பொருள் வாணிபக் கழக ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்படும் ஊதிய விகிதம் போல் அனைத்து நியாய விலைக்கடை ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களுக்கு 15 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு தேர்வு நிலை வழங்கப்படுவதை குறைத்து 10 ஆண்டுகள் முடித்தவர்களுக்கு தேர்வு நிலையும், 20 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு சிறப்பு நிலையும் வழங்குவது தொடர்பாக அந்தந்த நிறுவனங்களின் பணி விதிகளில் நடவடிக்கை எடுத்து வழங்கலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. பணியாளர்களுக்கு பணம் வழங்கப்பட்டது. ஆனால் அதை தற்போது வழங்கிய பணத்தை திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கை கைவிடப் பட வேண்டும்.

நியாய விலைக்கடை பணியாளர்கள் பணியில் சேரும்போது நியாய விலைக் கடை பணியாளர்கள் தான் என்று தேர்வு செய்து பணியமர்த்தப்பட்டனர். எனவே பொதுப் பணித் திறன் (காமன் கேடர்) தேவை யில்லை. நியாய விலைக்கடை பணியாளர்கள் பணிபுரியும் சங்கத்தில் பணி மூப்பு காரணமாக பதவி உயர்வு வரும்போது அதனை ஏற்றுக் கொள்கிறோம். என முடிவு செய்யப்பட்டுள்ளது.

நியாய விலைக்கடை பணியாளர்கள் தங்கள் இருப்பிடத்தில் இருந்து 10 கிலோ மீட்டருக்குள் பணி செய்ய வழிவகை செய்யப்பட வேண்டும். புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்ட பணியாளர்கள் வேறு மாவட்டத்தில் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு அவர்களின் இருப்பிடம் உள்ள மாவட்டத்தில் பணியாற்றஅனுமதிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நியாய விலைக்கடைக்கு வருகின்ற அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, பருப்பு போன்றவை கிடங்கில் இருந்து எடை குறைவாக வருகின்றது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே அத்தியாவசியப் பொருட்களை பாக்கெட்டாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமாய் தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டத்தில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளியில் விலையில்லா அரசு மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் மிதி வண்டிகளை மாணவிகளுக்கு வழங்கினார். உடன் பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், தலைமை ஆசிரியர் சின்னவெள்ளை தாய், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், பொதுக்குழு உறுப்பினர் ஏ.டி.முருகன், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், 101 வது (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.குட்டி, பகுதி துணைச் செயலாளர் கே.பி.சுரேந்தர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கழக துணைப் பொதுச் செயலாளர்

# ஆ.இராசா எம்.பி.யின் அண்ணி இரா.உமாராணி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி

பெரம்பலூர், ஆக. 11-
பெரம்பலூர் மாவட்டம், வட்டம் வேலூர் கிராமத்தைச் சேர்ந்த பேராசிரியர் முதுமுனைவர் டாக்டர் ஆ.இராமச்சந்திரன் (அரசின் கால நிலை மற்றும் மேலாண்மை குறித்த மேல்நிலை குழு உறுப்பினர்) அவர்களின் மனைவியும், ஆ.சிவசண்முகம், ஆ.கலியபெருமாள் (இந்து சமய அறங்காவலர்குழுத்தலைவர்) மேனாள் ஒன்றிய அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர், ஆ.இராசா ஆகியோரின் அண்ணியாரும்,



இரா.ராம்கணேஷ், முனைவர் இரா.பிரியதர்ஷினி அவர்களின் தாயாருமான திருமதி. இரா.உமாராணி அவர்கள் நேற்று (10.8.2023 வியாழக்கிழமை) நள்ளிரவு 12.15 மணியளவில் மறைவுற்றார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அம்மையாரின் நல்லடக்கம் நேற்று (10.8.2023 வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் திருச்சி, திருவானைக்காவல் சிவராம் நகரில் உள்ள அவர்களின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு இறுதிச் சடங்குகள் நடைபெற்றது.



அஸ்தினாபுரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார் மேலும் பத்தாம் வகுப்பு பன்னிரண்டாம் வகுப்புகளில் பள்ளியிலேயே முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 10,000 ரூபாய் 7000 ரூபாய் 5000. தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன், தலைமை ஆசிரியர் சந்திரன், மாமன்ற உறுப்பினர் சரண்யா மதுரை வீரன், பெற்றோர், ஆசிரியர், கழகத் தலைவர் எம். நாகராஜ், க. ரமேஷ், காரை செல்வராஜ், மதுரை வீரன், எம். இளவரசன், எச். பாஸ்கர், லோ.டில்லி, பாபு, பெற்றோர்கள் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## பூமி, நிலவை புகைப்படங்கள் எடுத்த சந்திரயான்-3 விண்கலம்...!

புதுடெல்லி, ஆக.11-
நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) 'சந்திரயான்-3' என்ற விண்கலத்தை, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து கடந்த மாதம் 14ந்தேதி விண்ணில் ஏவியது.

வெற்றிகரமாக 23 நாட்கள் பயணத்தை முடித்து கொண்டு, சந்திரயான்-3 விண்கலம் நிலவு சுற்றுப்பாதையில் நுழைந்தது. தற்போது நிலவின் சுற்று வட்டப் பாதையில் பயணித்து வருகிறது. தற்போது 174 கி.மீ., அதிகபட்சம் 1,437 கி.மீ. தொலைவு கொண்ட நிலவு வட்ட சுற்றுப்பாதையில் விண்கலம் வலம் வருகிறது.

இந்த நிலையில், சந்திரயான்-3 விண்கலம் பூமி மற்றும் நிலவை படம்பிடித்த புதிய புகைப் படங்களை, இஸ்ரோ தற்போது வெளியிட்டுள்ளது. நிலவில் தரை இறங்கக்கூடிய லேண்டரின் அடிப்பகுதியில் உள்ள கிடைமட்ட கேமரா மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை ஆ. சந்திரன்
### ஆகஸ்ட் 11 (1996)



இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் பகுதி பிரதிநிதியாகவும் – தென்சென்னை மாவட்டத்தில், வட்டக் கழகச் செயலாளர், மயிலை பகுதிக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.